DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.140/ 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW.6 |
| Name | திரு. வெங்கடேஷ் |
| Father Name | நாராயணன் |
| Village | தென்திருப்பேரை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 49 |

**<u>(1,2 எதிரிகள் ஆஜரில்லை: 1,2 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 12-06-2026.(நேரம்: 12.33PM )**

**(சாட்சி காணொலி காட்சி மூலம் விசாரிக்கப்படுகிறார்)**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது தென்திருப்பேரையில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன்.

3. அசா 1 ஐ எனக்கு தெரியாது.

4.இவ்வழக்கின் ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும்.

5.என்னிடம் காட்டப்படும் சேதமதிப்பு சான்றிழ் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எங்கு வைத்து எப்போது வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. **அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

6.வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

7. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 6 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 6ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் நான் வடக்குரத வீதியில் செல்வி இண்டஸ்டிரியல் ஓர்க்ஸ் என்ற கடையில் அசா 1 தனது வீட்டில் சேதப்பட்டிருந்த ஜன்னல் கண்ணாடிகளை சரி செய்ய என்னிடம் கொடுத்தார் என்றும் அதற்கு அன்றை சேதமதிப்பு ரூபாய் 4000/– என்று சான்று வழங்கினேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது இவ்வழக்கின் 1,2, எதிரிகள் நன்கு தெரிந்தவர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் காணொலி காட்சி மூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.